செ.வெ.எண்.53 நாள்:26.07.2017

# செய்தி வெளியீடு

நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி, நீலகிரி மாவட்டம் ஆகியோர் இணைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக அலுவலர்கள், இதர துறை அலுவலர்கள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ முகாம், சாந்தி விஜய் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, உதகையில் 30.07.2017 ஞாயிற்று கிழமை அன்று காலை 10.00 மணி முதல் 2.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் சிறப்பு மருத்துவர்களாக இருதய நோய் நிபுணர், பல் பரிசோதனை நிபுணர், கண் பரிசோதனை நிபுணர் மற்றும் பொது நல மருத்துவர்கள் கலந்து கொண்டு பரிசோதனை செய்ய உள்ளனர். எனவே இம்மருத்துவ முகாமில் அனைத்து துறை அரசு அலுவலர்கள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுகொண்டுள்ளார்.